பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

15 11 2024 **FRIDAY** **6.30 PM**

மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பழங்குடியினரின் கல்வி, வருவாய் மற்றும் சுகாதார மேம்பாட்டிற்கு மத்திய அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. தேர்வு தொடர்பான சீர்திருத்த நடவடிக்கைகளில் மாநில அரசுகளும் பங்கேற்க வேண்டும் என்று மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

3. தமிழகத்தை முதன்மை மாநிலமாக உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் தாம் செயல்பட்டு வருவதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

4. சென்னை – திருநெல்வேலி இடையே இயக்கப்படும் வந்தேபாரத் ரயில் சேவை பொதுமக்களிடம் பெரும் வரவேற்பை பெற்றுள்ளதாக பிஜேபி கூறியுள்ளது.

5. மலேசிய கோப்பை ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் அபய் சிங் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

*---- இனி விரிவான செய்திகள் ----*

<<<<<>>>>

பழங்குடியினரின் கல்வி, வருவாய் மற்றும் சுகாதார மேம்பாட்டிற்கு தமது அரசு கூடுதல் முக்கித்துவம் அளித்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

பழங்குடியினர் தலைவர் பகவான் பிர்சா முண்டாவின் 150–ஆவது பிறந்த தின ஆண்டு கொண்டாட்டங்களை பீகார் மாநிலம் **Jamui-**ல் இன்று தொடங்கிவைத்து அவர் பேசினார்.

நாடு முழுவதும் ஆளுநர்கள், முதலமைச்சர்கள் மற்றும் அமைச்சர்கள், பழுங்குடியினர் பெருமை தின நிகழ்ச்சியில் பங்கேற்றதாக அவர் தெரிவித்தார்.

பழங்குடியினரின் பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்தை பாதுகாப்பதில் தமது அரசு உறுதியுடன் உள்ளதாகவும் திரு நரேந்திர மோடி கூறினார்.

<<<<<>>>>

போட்டி மற்றும் பொதுத்தேர்வுகளில் சிறு தவறுகூட நடைபெறாமல் இருப்பதை உறுதி செய்வதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்று மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

இன்று ஹைதராபாதில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தேர்வு சீர்திருத்தம் தொடர்பாக டாக்டர் ராதாகிருஷ்ணா குழு அளித்த பரிந்துரைகளை மத்திய அரசு ஆய்வு செய்து வருவதாக கூறினார்.

தேசிய தேர்வு முகமை இந்த பணிகளை மேற்கொண்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

தேர்வுகள் தொடர்பான சீர்திருத்த நடவடிக்கைகளில் மத்திய அரசோடு இணைந்து மாநில அரசுகளும் பங்கேற்க வேண்டும் என்று திரு தர்மேந்திர பிரதான் கேட்டுக்கொண்டார்.

<<<<<>>>>

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பெட்ரோலியத்துறை முக்கிய பங்கு வகிப்பதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு ஹர்தீப் சிங் பூரி கூறியுள்ளார்.

தில்லியை அடுத்த நொய்டாவில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், நாட்டின் எரிசக்தித்தேவை மூன்று மடங்கு அதிகரித்துள்ளதாக குறிப்பிட்டார்.

நாள்தோறும் 6 கோடியே 70 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பெட்ரோல் நிரப்பும் மையங்களுக்கு செல்வதாக அவர் கூறினார்.

பெட்ரோலியத்துறையில் பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளை மத்திய அரசு கொண்டுவந்துள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

இதன் காரணமாக, தொழில் புரிவதற்கு உகந்த சூழ்நிலை ஏற்படுத்தித் தரப்பட்டிருப்பதாகவும் திரு ஹர்தீப் சிங் பூரி கூறினார்.

<<<<<>>>>

தமிழகத்தை முதன்மை மாநிலமாக உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் தாம் செயல்பட்டு வருவதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

அரியலூரில் நடைபெற்ற அரசு விழாவில் இரண்டாம் கட்ட "ஊட்டச்சத்தை உறுதி செய்" திட்டத்தை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

குழந்தைகள் திடமாக இருக்க வேண்டும் என்ற நோக்கில், நீலகிரி மாவட்டத்தில் கடந்த 2022-ஆம் ஆண்டு இந்த திட்டம் தொடங்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

தற்போது இரண்டாவது கட்டமாக இந்த திட்டம் இன்று தொடங்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

அரசியலுக்கு அப்பாற்பட்டு மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி வருவதாகவும் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

<<<<<>>>>

ஊட்டச்சத்து பெட்டகம் திட்டத்தை பெண்கள் முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று நிதியமைச்சர் திரு தங்கம் தென்னரசு கேட்டுக்கொண்டுள்ளார்.

விருதுநகர் மாவட்டத்தில் இந்த திட்டத்தின்கீழ் பயனாளிகளுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தினை வழங்கி அவர் பேசினார்.

ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகளை கண்டறிந்து, அவர்களின் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கப்படுவதாக அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<>>>>

தமிழகத்தில் வனப்பரப்பை அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக வனத்துறை அமைச்சர் திரு பொன்முடி கூறியுள்ளார்.

இன்று விழுப்புரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வன விலங்குகளை பாதுகாப்பதற்கும், உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக கூறினார்.

இதற்கென உயிரின குற்றங்கள் கட்டுப்பாட்டு பிரிவு என்ற ஒரு பிரிவு தொடங்கப்பட்டுள்ளதையும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

<<<<<>>>>

மாநில மற்றும் மாவட்ட நுகர்வோர் ஆணையங்களில் காலியாக உள்ள பணியிடங்களை உடனடியாக பூர்த்தி செய்யுமாறு மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக, நுகர்வோர் விவகாரங்கள் துறை செயலர் திருமதி நிதிகரே, மாநிலங்களின் முதன்மைச் செயலர்களுடன் ஆய்வு மேற்கொண்டு பேசினார்.

இந்த ஆணையங்களில் காலி பணியிடங்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பது குறித்து கவலை தெரிவித்த திருமதி நிதிகரே, இதில் மாநில அரசுகள் விரைந்து செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

<<<<<>>>>

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் - 53 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>

சென்னை – திருநெல்வேலி இடையே இயக்கப்படும் வந்தேபாரத் ரயில் சேவை பொதுமக்களிடம் பெரும் வரவேற்பை பெற்றுள்ளதாக பிஜேபி கூறியுள்ளது.

இதன் காரணமாக இந்த ரயில்களின் இருக்கைகளை இரண்டு மடங்காக உயர்த்த மத்திய அரசு முடிவு செய்துள்ளதாக பிஜேபி அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

இதன்படி, தற்போது இயக்கப்படும் இந்த ரயிலில் உள்ள எட்டு பெட்டிகளுடன், கூடுதலாக எட்டு பெட்டிகள் இணைக்கப்பட உள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, வந்தே பாரத் ரயில் இருக்கைகளின் எண்ணிக்கை ஆயிரத்து 100–ஆக அதிகரிக்க உள்ளதாக பிஜேபி அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

<<<<<>>>>

ரயில் விபத்து ஏற்பட்டால் பயணிகளை பாதுகாப்பாக எப்படி மீட்பது என்பது குறித்த ஒத்திகை நிகழ்ச்சி சேலம் மாவட்டம் ஏக்தாப்பூர் ரயில் நிலையத்தில் இன்று நடைபெற்றது

ரயில்வே பாதுகாப்புப்படை, தீயணைப்புத்துறை, மீட்புக்குழுவினர் இந்த ஒத்திகை நிகழ்ச்சியில் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - விஜயகுமார் - 48 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>

*மாவட்டச் செய்திகள்*

தருமபுரி மாவட்டம் இலக்கியம்பட்டி அங்கன்வாடி மையத்தில் ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகளின் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தினை ஆட்சியர் திருமதி சாந்தி இன்று வழங்கினார்.

-------------

ராணிப்பேட்டை மாவட்டம் அல்லாலச்சேரி கிராமத்தில் கால்நடைகளுக்கான சிறப்பு மழைக்கால மருத்துவ முகாமை ஆட்சியர் திருமதி சந்திரகலா இன்று தொடங்கிவைத்தார்.

--------------

திருப்பூரில் பள்ளி மாணவர்கள் பங்கேற்கும் சாலை பாதுகாப்பு ரோந்துத் திட்டத்தை காவல்துறை தொடங்கியுள்ளது.

----------------

தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோவில் கடற்கரையில் பௌர்ணமி தினமான இன்று பக்தர்கள் தங்குவதை தவிர்க்க வேண்டும் என்று காவல்துறை கேட்டுக்கொண்டுள்ளது.

--------------

நெல்லை மாவட்டம் மணிமுத்தாறு அருவியில் நீர்வரத்து அதிகரித்துள்ளதையடுத்து, சுற்றுலாப்பயணிகள் குளிப்பதற்கு இரண்டாவது நாளாக இன்றும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

மலேசிய கோப்பை ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் அபய் சிங் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 12-14, 11-5, 12-10, 11-8 என்ற செட் கணக்கில், இந்தியாவின் வேலவன் செந்தில்குமாரை வென்றார்.

-------------

பக்ரைன் சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Vishal Vasudevan** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில அவர், 21-17, 23-21 என்ற செட் கணக்கில், இலங்கையின் **Thilina Rajakaruna** –வை வென்றார்.

இதர ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டங்களில் வெற்றிபெற்று கவின் தங்கம் மற்றும் **Atul John Mathew** –வும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

----------

இந்தியா – தென்னாப்பிரிக்கா இடையேயான நான்காவது மற்றும் இறுதி டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

ஜோஹன்னஸ்பர்கில் இப்போட்டி இரவு மணி 8.30-க்கு தொடங்குகிறது.

--------------

ரயில்வே அணிக்கு எதிரான ரஞ்சிக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் தமிழகம் வலுவான நிலையில் உள்ளது.

அகமதாபாதில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மூன்றாம் நாளான இன்று தமிழகம் முதல் இன்னிங்சில் 438 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

அதிகபட்சமாக முகமது அலி 91 ரன் எடுத்தார்.

இதனைத்தொடர்ந்து இரண்டாவது இன்னிங்சை ஆடிவரும் ரயில்வே அணி ஆட்டநேர இறுதியில் 5 விக்கெட் இழப்பிற்கு 169 ரன் எடுத்துள்ளது.

***<<<<<END>>>>***